# IN THE COURT OF THE SUBORDINATE JUDGE,

# METTUPALAYAM

## DEPOSITION OF WITNESS

## O.S. 148/2019

## CNR.No.TNCB19000

Date: 10.03.2026 DW-2

| | | | |
|---|---|---|---|
| **பெயர்** | பாக்கியவதி | **வயது** | 73 |
| **த/பெ** | நாகராஜ் | **வட்டம்** | அருவங்காடு |
| **விலாசம்** | அருவங்காடு | **மாவட்டம்** | நீலகிரி |
| | | **தொழில்** | |

The witness swearned under oaths Act 1969 on this the day of 10th March 2026

பி. வா.சா.2 மீண்டும் வரவழைக்கப்பட்டு வாதி தரப்பில் குறுக்கு விசாரணை

**வாதி தரப்பு குறுக்கு விசாரணை**

நான் தற்போது எனது மகள் ( 3ம் பிரதிவாதி) வீட்டில் குடியிருக்கிறேன். எனது மகள் வீட்டில் சுமார் 1 வருடமாக இருக்கிறேன். அதற்கு முன்பு 60 வருடங்களாக அருவங்காட்டில் வசித்து வந்தேன். சாட்சி சொல்ல எனக்கு நீதிமன்றத்தில் இருந்து அழைப்பாணை வந்ததா என்றால் எனது மகள் சொல்லி வந்தேன். முதல் விசாரணை வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்தை நீதிமன்றத்தில் வைத்து போட்டேன். முதல் விசாரணை வாக்குமூலத்தில் என்ன எழுதி உள்ளது என்ற விபரம் எனக்கு தெரியும். ஆனால் படித்து பார்க்கவில்லை. முதல் விசாரணை வாக்குமூலத்தை எங்கு தட்டச்சு செய்யப்பட்டது என்றால் சுந்தரம் டைப் ஆபிசில் தட்டச்சு செய்யப்பட்டது.

முதல் விசாரணை வாக்குமூலத்தை தட்டச்சு செய்த பிறகு நான் படித்து பார்த்து தெரிந்து கொள்ளவில்லை என்றால் சரிதான். உயிலை எழுதியது யார் என்றால் சுப்பைய கவுடர். சுப்பைய கவுடர் எனது சம்மந்தி என்றால் சரிதான். அவருக்கு எத்தனை வாரிசுகள் என்றால் எனக்கு தெரியவில்லை. சுந்தரமூர்த்தி என்று நினைத்தேன். சுப்பையனுக்கு இரண்டு மனைவிகள் என்றால் சரிதான். ஒரு மனைவி பெயர் ரங்கம்மாள் என்றால் நினைவில்லை. இன்னொரு மனைவி பெயர்

திம்மக்காள் சுந்தரமூர்த்தியின் அம்மா ஆவார். சுப்பைய கவுடருக்கும் எனக்கும் நல்ல பேச்சு வார்த்தை இருந்தது. சுந்தரம் டைப் ஆபிசில் கையெழுத்து செய்வதற்காக யார் என்னை அழைத்து சென்றார்கள் என்றால் சுந்தரமூர்த்தி , சுப்பைய கவுடர் , திம்மக்காள் மற்றும் ஒருவர் வந்தார் அவரது பெயர் தெரியவில்லை.

பெயர் தெரியாத நபர் எனக்கு ஏற்கனவே அவர் யார் என்று எனக்கு தெரியாது. 1987 ல் அருவங்காட்டில் இருந்து கையெழுத்து செய்வதற்காக வந்தேன்.

(வழக்கறிஞர் கேட்டுக்கொண்டதன்பேரில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்திவைக்கப்படுகிறது)

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொன்னதை என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு பின்னர் சாட்சியால் சரி என ஒப்புக்கொண்டு என் முன்பு கையொப்பம் செய்தார்.

Sd/-K.Palanivel,

சார்பு நீதிபதி,

சாட்சியின் கையொப்பம்

மேட்டுப்பாளையம்.